**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>S.T.C. No. 1269/2022</u>**

Name : **தமிழ்ச்செல்வம்** Date : 13.12.2024

Father Name : **சின்னசாமி** :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

எனது பெயர் தமிழ்செல்வம் மட்டும் தான் வேறு பெயர் கிடையாது. எந்த முகவரியில் வசிக்கிறேன் என்றால் மணவெளித்தெருவில் வசிக்கிறேன். புகார்தாரர் அரிவேளூரில் வசிக்கிறார். எனது ஊருக்கும் புகார்தாரர் ஊருக்கும் சுமார் 1 கிமீ துாரம் இருக்கும். புகார்தாரர் எனது உறவினர் கிடையாது. புகார்தாரர் விடுதலை சிறுத்தை கட்சியில் எனது ஊர்பகுதியின் தலைவராக உள்ளார். நான் புகார்தாரர் வீட்டில் தான் எப்போதும் இருப்பேனா என்றால் நான் வயல்வேலை, பெயிண்டர் மற்றும் டிங்கரிங் வேலைகள் செய்வேன். எப்போதாவது புகார்தாரர் வீட்டுக்கு செல்வேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் வயல்வேலை செய்வேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் அவர் மிராசு தாரராக இருந்து விவசாய வேலை மற்றும் மீன்குட்டை தொழில் செய்துவருகிறார்.

எதிரியை எனக்கு தெரியும். எதிரிக்கு எந்த ஊர் என்றால் சென்னையாகும். புகார்தாரரும் எதிரியும் உறவினர்கள் என்றால் சரிதான். புகார்தாரரும் எதிரியும் எந்த வகையில் உறவினர் என்று தெரியாது ஆனால் துாரத்து உறவினர் ஆவார்கள். எதிரி அரிவேளூர் கிராமத்தில் பெண் எடுத்து திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கு புகார்தாரர் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். புகார்தார் கட்சியில் உள்ளதால் அவருக்கு எதிராக குற்ற வழக்குகள் உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எதிராக காவல் நிலையத்தில் வழக்கு உள்ளதா என்றால் இல்லை.

பாரதிமோகன், அறிவழகன் ஆகியோரை தெரியுமா என்றால் பாரதிமோகனை தெரியும், அறிவழகனை தெரியாது. பாரதிமோகன் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது பெயரிலும், புகார்தாரரின் பெயரிலும் காவல் நிலையத்தில் வழக்கு உள்ளதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**